https://tt.me/aedahamlibrary

https://tt.me/aedahamlibrary

ரூமி
மஸ்னவி துளிகள்

DROPLETS
Rumi’s Maznavi

தொகுப்பு
கவிஞர் இசாக்

ஆங்கில ஆக்கம்
முனைவர் எச்.முகம்மது சலீம்

https://tt.me/aedahamlibrary

ரூமி
மஸ்னவி துளிகள

வெளியீடு : தமிழ் அலை,
80/24பி. பார்த்தசாரதி தெரு,
தேனாம்பேட்டை,
சென்னை - 600 086,
தொலைபேசி: 044 2434 0200,
மின்னஞ்சல்: tamilalai@gmail.com

ஒளியச்சு : நெறி, சென்னை - 17
முகப்பு ஓவியம் : செந்தில்
வடிவமைப்பு : தமிழ் அலை ஊடக உலகம்,
சென்னை - 600 086,
அலைபேசி : 94868 38801
பக்கம் : 112 விலை : ரூ. 80/-

https://tt.me/aedahamlibrary

ஞானத்தின் முகவரி
கவிவேந்தர் மு.மேத்தா

ஜலாலுத்தீன் ரூமி - தன்னைப் பெற்றெடுத்த மண்ணுக்குத் தான் கற்றெடுத்த பெருமைகளைக் காணிக்கையாக்கியவர். அந்தத் தத்துவ வித்தகரின் பெயரை உச்சரிக்காதவர் உலகில் இல்லை.

அதைத் தமிழ் நூலாக்கித் தந்திருப்பவர் தமிழ் அலைப் பதிப்பகத்தின் உரிமையாளர் கவிஞர் இசாக் அவர்கள். பிறரை நேசிப்பதையும் பிறரால் நேசிக்கப்படுவதையும் பெருமையாய்க் கருதும் பெருந்தகையாளர்.

அலையும் பிறையும் இணைந்தால் எப்படி இருக்கும்? அழகாய் இருக்கும்!

அதில் ஆனந்தம் மிதக்கும். சிங்கப்பூர் இளம்பிறையும் சென்னைத் தமிழ்அலையும் இந்நூலில் சங்கமமாகி இருக்கின்றன.

இந்நூல் தம்பி இசாக் தமிழுக்குத் தந்திருக்கும் நூதனம்.

தமிழ்அலை - இளம்பிறைக்கு வழங்கிய சீதனம்.

ஞானத்தின் முகவரியான ஜலாலுத்தீன் ரூமியை நினைத்தவுடன் எழுதும் எழுத்துக்கள்கூட கண்சிமிட்டி நம்முடன் கண்ணாமூச்சி ஆடுகின்றன.

நடைவண்டிகளைக்கூட நலம் விசாரிப்பவர் கவிஞர் இசாக். இந்நூலில் அவர் ஆகாய விமானங்களையே நமக்காக அணிவகுக்கச் செய்கிறார்.

அன்புடன்,

மு. மேத்தா

https://tt.me/aedahamlibrary

ஒரு துளிக்கடல்
நை.மு.இக்பால்

“உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாம்” என்றான் பாரதி.

‘வாக்கு’ என்பது என்ன? ஓர் ஒலித்துளி!

தான் சுட்டும் பொருளைச் ‘சொலிக்க’ச் செய்வதால் &- தெளிவாகக் காட்சிதர வைப்பதால் & அது ‘சொல்’ எனப்பட்டது.

உண்மை ஒளி உடைய உள்ளத்திலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு சொல்லும் வெறும் ‘ஒலி’ அன்று; ‘ஒளி’ என்கிறான் அந்த மகாகவி. அந்தச் சொல் தன் பொருளை வெளிச்சப்படுவதோடு, அதைச் சுற்றியுள்ள அத்தனைப் பொருள்களையும் ஒளிமயமாக்கிவிடும்.

“மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின் இன்பம்” என்று அந்த வெளிச்ச வார்த்தைகளையே வேண்டி நின்றான் பாரதி. மந்திரம் போன்ற ஒளிச்சொற்கள் மாபெரும் மெய்ஞ்ஞானிகளுக்கும் மகாகவிகளுக்குமே வாய்க்கும். அவை கைவிளக்கின் ஒளித்துளியாய் இருளின் கரைகளுக்குள் தேங்கி தேங்கி நின்றுவிடாது, கலங்கரை விளக்காய்ச் சுழன்றெழுந்து கதிரவனின் சுடரொளியாய் வெளியெங்கும் ஒளி நிரப்பும்!

*

“கடலில் நீ ஒரு துளி அன்று -& ஆனால்

உன் ஒவ்வொரு துளியும் ஒரு சமுத்திரம்”

-மௌலானா ஜலாலுத்தீன் ரூமியின் மஸ்னவியில் ஒரு துளி இது!

நீர்மப் படிகத்தின் ஒரு சிறு படிமம்தான். இது எத்தனை அலைகளை நம் இதயக் கரைகளில் கொண்டுவந்து மோதுகிறது... மேலோட்டமாய்ச் சிந்திக்கும்போது கடல்கடலாகக் கற்பனை ஊற்றைப் பெருக்கெடுக்கவைக்கும் கவிஞனின் பேனா மைத்துளியை இது குறிப்பதாகத் தோன்றுகிறது. ஆழ்ந்து சிந்தித்தால்...

இந்தத் துளி, ஒரு கோணத்தில்-

முன்னவர்க்கும் முன்னவனாய் மூத்த ஆதி மனிதனில் தொடங்கி பின்னவர்க்கும் பின்னவராய் ஊழி இறுதிவரை தொடர்கின்ற ஜனசமுத்திரத்தையே தன் மரபணுவில் அடக்கிவைத்துள்ள

https://tt.me/aedahamlibrary

குருதித்துளியை - உயிர்த்துளியைச் சுட்டுவதாக அர்த்தம் கொள்கிறது.

இன்னொரு கோணத்தில் -

விண்ணைக் கிழிக்கும் ஏவுகணையையும் மண்ணைக் கிழிக்கும் ஏர்முனையையும் படைத்துப் பூமியில் வாழ்வைத் தளிர்க்க வைக்கும் தேகமழைநீரின் தேக்கக் கடலான வேர்வைத் துளியை இது சுட்டுவதாகப் படுகிறது.

மற்றுமொரு கோணத்தில் இது-

நேற்றின் கரையையும் நாளையின் கரையையும் இணைத்து இன்றாய், இக்கணமாய் அலைவீசிக் கொண்டிருக்கும் கால சமுத்திரத்தின் நிகழ் மணித்துளியாய்க் காட்சித் தருகிறது.

வேறொரு கோணத்தில்-

அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணிலிருந்து பெருகி அரசகோபுரங்களையே அடித்துச் சாய்த்துவிடும் உப்புப்புயற் கடலாய்;

அன்பின் பிரிவாற்றாமையில் அழும் விழியில் பெருகிக் கடவுள் என்னும் கருணைப் பேராழியையே விலைபேசும் கண்ணீர் அலைவீச்சாய்... (இது இயலுமா? “அழுதால் உன்னைப் பெறலாமே!” என்பது தமிழின் மணிவாசகம்!)

அடடா... ஒரு துளிக்குள் பொதிந்திருக்கும் எத்தனைக் கடல்கள்... அவற்றில்தான் எத்தனை ஆழம்!

இப்படிப் பல்லாயிரம் துளிகள் கொண்ட ஞானக்கடல்- இருபதாயிரம் ஈரடிக் கண்ணிகளால் ஆறு பாகங்களாய் அமைந்த ஞானக்காவியம், மஸ்னவீ ஷரீப்!

சூஃபிகள் எனப்படும் முஸ்லிம் மெய்யுணர்வாளர்களின் தலையாய வழிகாட்டி நூலாகக் கொண்டாடப்படுவது.

சூஃபிகள் என்பார் யாவர்?

இறைவன் வகுத்த ‘ஷரியா’ என்னும் வாழ்வியல் நெறியில் நபிகள் நாயகம் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை ‘ஸுன்னா’ எனப்படுகிறது. இந்த வாழ்வியல் நெறியில் தவறாது வாழ்ந்து கொண்டே; தம் அந்தரங்கத்தில் இறைவன் மீது நேசத்தை வளர்த்துக்கொண்டு அவனைக் கண்டடைந்து இரண்டறக் கலந்துவிடும் முனைப்போடு வாழும் ஆன்மிக வாழ்க்கையே சூஃபிகளின் நெறியாகும். நம் சித்தர்களின் நெறியை மிகுதியும் ஒத்ததே சூஃபிகளின் வழி. இவர்கள் நாடு, இனம், மதம், சாதி போன்ற

https://tt.me/aedahamlibrary

வேற்றுமைகள் அனைத்தையும் கடந்த மெய்யுணர்வாளர்கள்.

அதனால்தான் இன்று மேல்திசை நாடுகள் கீழ்த்திசை நாடுகள் அனைத்திலும் ரூமியும் அவரது கவிதையும் கொண்டாடப்படுவதைக் காண்கிறோம். கிறித்தவ ஆலயங்களிலும், யூத வழிபாட்டுத்தளங்களிலும், ஜென் மடாலயங்களிலும் மட்டுமின்றி பெருநகர ஓவிய, இசை, நாடகக் கூடங்களிலும் ரூமியின் கவிதைகள் ஒலிக்கின்றன. உலகின் பெரும்பான்மை மொழிகளில் பெயர்க்கப்பெற்றவை என்ற பெருமையுடைய நூல்களில் மஸ்னவி சிறப்பிடம் பெறுகிறது.

மடோனா, டெமிமூர் போன்ற பாடகர்களின் 'பாப்' இசை நிகழ்ச்சிகளில் மஸ்னவியின் ஆங்கில மொழியாக்கப் பாடல்கள் இடம்பெறுகின்றன என்னும் செய்தி வியப்பளிக்கிறது.

*

கவிஞர் இசாக்!

புதிய தமிழ் எழுத்து நமக்கு வழங்கிய நம்பிக்கை குருத்து.

வாழ்வைத் தேடிக் கடல்கடந்து அரபகத்துக்கு வலசை போய் வந்த பாட்டுப் பறவை. ஆரவாரிக்கும் அரபிக் கடலின் ஆழநெடுந்திரைகளை அனாயாசமாய்க் கடந்த இவருக்கு, தினார்க் கானலைத் துரத்தி ஓடித் தளர்ந்து மானாகிப் போனோரின் வேர்வை, விழிநிர்த் துளிகளை எளிதாய்க் கடக்க முடியவில்லை. கனவுச் சுமுத்தி ஆழங்களில் ரணங்களாய் மலர்ந்த ரகசியப் பூக்களின் தேன் துளிகளைக் கவிதை நூலாக்கி நம் கரை சேர்த்த 'தமிழ் அலை' இசாக்!

படைப்புத் தமிழின் அண்ணன்மார் பலருக்கு பாசத்தம்பி. பழகுவோர் எவரையும் போட்டுப் பூட்டும் அன்புச் சிறையின் தங்கக் கம்பி.

பாரசீகத்தின் ஆன்மிகப் பெருங்கடலில் இருந்து ஐம்பது துளிகளை நம் கரையில் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது இசாக்கின் தமிழ் அலை.

இனிய எளிய நவினக் கவிதை வடிவத்தில்,

அழகுமிக்க அச்சாக்கத்தில்.

அருமையான ஆங்கிலப் பெயர்ப்புடன்

சுழன்றாடும் சூஃபியின் ஓவியம் ரூமி வழியைப் பின்பற்றும் மெய்யுணர்வாளர்தம் மரபுச் சின்னம்; மிக அழகாய் அமைந்துள்ளது.

ஆழமான கவிதைகளைத் தாகிப்பவர்களே, ஆழ்மனத் தியானத்தின் வழி

https://tt.me/aedahamlibrary

இறைவனைச் சேர மோகிப்பவர்களே இந்தத் துளிக்கடல்களில் மூழ்க வாருங்கள். நீந்திக் களிக்கலாம், மூழ்கி முத்தெடுக்கலாம். சிறுதுளிதானே என்று எளிதாகக் கடந்துவிட முடியுமா? பிரம்மாண்டச் சூரியனையே பிரித்து மேய்ந்து தொடுவானத்தில் வானவில்லாய்த் தொங்கவிட்டுப் போயிருப்பது ஒரு சிறு துளிதானே!

நை.மு.இக்பால்

27.10.2017

https://tt.me/aedahamlibrary

கடலின் துளிகள்

கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களைச் சந்திக்கிறபோதெல்லாம் ஆகச்சிறந்த ஆளுமைகளின் ஆக்கங்களை அள்ளி அள்ளி ஊட்டுவார். வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் அவரைச் சந்தித்து உரையாடுகிற பழக்கத்தைக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு முறையும் அவர் புதிது புதிதாக இருப்பார்! ஆகப் பழையவற்றோடும் இருப்பார்.

எல்லாச் சந்திப்பிலும் ரூமி வந்துவிடுவார். ஒருமுறை என் ‘மௌனங்களின் நிழற்குடை’ நூலை கவிக்கோவிடம் கொடுத்துவிட்டு அமர்ந்திருந்தேன். புத்தகத்தைப் புரட்டியவர் ஒரு பக்கத்தில் நிறுத்திவிட்டு நிமிர்ந்து, ‘ரூமியைப் படிச்சிருக்கீங்களா?’ என்றார். ‘முழுமையாக படிக்கவில்லை அய்யா... சிலவற்றைப் படித்திருக்கிறேன்’ என்றேன். ‘சரி... மஸ்னவி ஷரீப் வாங்கிப் படி’ என்றார். நானும் சரி என்றேன். ஆனால் காரணம் புரியவில்லை.

பிறகு ஒரு சூழலில் மஸ்னவி வாசிக்க நேர்ந்தபோது அதிர்ந்தேன். முதல் கண்ணியே நான் எழுதியிருந்த கவிதையொன்றைப் போல இருந்தது ; தவறு & அந்த முதல் கண்ணியைபோல என் கவிதை இருந்தது. அன்று கவிக்கோ இதற்காகவே படிக்கச் சொல்லியிருப்பாரோ என நினைத்துக்கொண்டேன்.

ஜலாலுத்தீன் ரூமியின் மஸ்னவி ஷரீப் பாகங்கள் நரியம்பட்டு ஸலாம் மொழிபெயர்ப்பில் தமிழில் வந்துள்ளவற்றை வாசிக்கும்போதெல்லாம் எனக்குப் பிடித்தமானவற்றைக் குறித்து வைத்தேன். அதை ‘ரூமி மஸ்னவி துளிகள்’ என்னும் புதுக்கவிதை நூலாகத் தொகுத்துள்ளேன்.

கவிதை வரிகளை செழுமைபடுத்தி சிறந்த முன்னுரை அளித்த பேராசிரியர், கவிஞர் நை.மு.இக்பால், நெகிழ்ச்சியான பின்னட்டை வரிகளை வழங்கிய அண்ணன் அறிவுமதி, ஆலோசனைகளால் அழகு செய்த அண்ணன் பழநிபாரதி, நண்பர் யுகபாரதி ஆகியோருக்கு என் அன்பின் மகிழ்ச்சி. கவிதைகளைச் சிறப்பாக ஆங்கிலப்படுத்தி அளித்துள்ள சிங்கப்பூர் முனைவர் முகம்மது சலீம் அவர்களின் அன்பிற்கு நன்றி.

சிறப்பான முகப்பு ஓவியம் வரைந்தளித்த அன்பிற்கினிய ஓவியர் செந்திலுக்கும் சிங்கப்பூரில் சிறப்பாக வெளியிடும் இளம்பிறை பப்ளிஷர்ஸ் தௌபிக் அவர்களுக்கும் அன்பு நன்றி.

அன்பின்

https://tt.me/aedahamlibrary

இசாக்

https://tt.me/aedahamlibrary

நம் செயல்பாடுகளின்
பதிவுகளோ
சேகரிப்போ
இல்லையென்றாகிவிட்டால்
செய்வது என்பது பொய்யாகிவிடும்
சொல்வது என்பது
வெறும் புனைந்துரையாகிவிடும்

5621

Should there be
No collection or
Registry of
Deeds of us
Doings become
Falsity
Sayings
Sheer foretales

https://tt.me/aedahamlibrary

திடீரென
ஒரு பூனை
எலியைத் துரத்திக்கொண்டு
கடைக்குள்ளே குதித்தது
பாவம்
அந்தக் கிளி
பயத்தால் நடுங்கியது

319

Rushed in
Sudden
The cat
Chasing rat
Into the store there
Shriveled
The parrot poor
In fear intense

https://tt.me/aedahamlibrary

முட்டாள் மனிதன்
அந்த நிழலை
வேட்டையாட முனைகிறான்
அதன் பின்னால்
ஓடி ஓடி
அவன்
தன் பலத்தையே
இழந்துவிடுகிறான்

526

Foolish he
Labours
To hunt
That shadow
Runs and chase
After it
Until lost he
The strength in him
Complete

https://tt.me/aedahamlibrary

உனக்கு நன்றாகத் தெரியும்
சகிப்புத் தன்மையுடைய
ஒரு நண்பனை
நீ பகைத்துக்கொண்டால்
அவன்
பாம்பைப்போல மாறிவிடுவான்

12864

Know you well
For certain
Should you
Wrong
A friend of patience
Becomes he sure alike
Serpent deadly

https://tt.me/aedahamlibrary

உனது
இந்த உணர்வின் மீது
அறிவின் நிழல் படிந்துள்ளது

செம்பின் மீது பூசப்பட்ட
தங்க முலாமைத்
தற்காலிகமெனக் கருது

Into
This feel
Shrouds
The shadows of
Wisdom
Discern you
Temporal is
The Golden casing
To the vase
Copper

https://tt.me/aedahamlibrary

ஒவ்வொரு தொழிலுக்கும்
மூலதனமும் முதலும் எது?
கற்பனைகளும்
அதற்குத் தக்க
நடவடிக்கைகளுமேயாகும்

5629

For every trade
Which is
The Capital
And where from
The Funds ?
Surely are
The dreams of you
And actions
In
Accordance

https://tt.me/aedahamlibrary

இருள்நிறக் கரி
நெருப்புக்குக்
கூட்டாளியானதும்
இருள்நிறம் விரண்டோடி விடுகிறது
அதுவும்
முழுமையான
ஒளியாகி விடுகிறது

6053

Whence
The darkened fuel
Becomes
Friend to fire
Runs away
Darkness
There it
Becomes light bright
Entire

https://tt.me/aedahamlibrary

மனத்திலே
பதற்றம் ஏற்படுகிறதென்றால்
மனக்கண்கள் இரண்டும்
அடைபட்டுக் கிடக்கின்றன
என்பதாகக் கணித்துக்கொள்.
அவை அளவற்ற
ஒளியை விரும்புகின்றன

4659

Realize
Thy Minds eye
Closed
Once thy
Mind flutter
In fear
That your
Mind
Longs for
Light in abundance

https://tt.me/aedahamlibrary

மனம் ஒன்றாமல்
ஆன்மாவைத் தொடாமல்
உதடுகளிலே தவழும்
வார்த்தைகளெல்லாம்
குப்பைக்கூளங்களிலே முளைக்கும்
பசுமை போன்றவை

7684

Liken
The green shrubs in
waste mounts
Those words
That escape
Lips
Without
Mind’s intent

https://tt.me/aedahamlibrary

பேதைகளின் நட்பு
அவர்களின் பகைமையைவிட
மோசமானது
உனக்குத் தெரிந்த
தந்திரங்களையெல்லாம் பயன்படுத்தி
அதை விரட்டிவிடுவதே மேலானது

6788

Friendship of
Dimwits
Worse than
Their enmity
Drive them away afar
With
All tricks
You know

https://tt.me/aedahamlibrary

நேர்மை
உன்
ஒவ்வொரு புலனுக்கும்
விழிப்புணர்வாக மாறிவிடுகிறது
ஆர்வம்
அவற்றுக்குத்
தோழனாகிவிடுகிறது

8114

Honesty
Makes
Every sense of you
Alert
Eagerness
Becomes friendly
To senses
Yours

https://tt.me/aedahamlibrary

கண்களால் காண்பது
காதலை
வளர்த்து விடுகிறது
காதலானது
கண்களிலே
வாய்மையை
விசாலமாக்கி விடுகிறது.

8113

Gazing
Breeds
Love smoothly
And
Love broadens
Truth
In
Your vision
Entire

https://tt.me/aedahamlibrary

உன்னுடைய பார்வைக்கே
தெரியாதபடி
நீ செயலாற்ற வேண்டும்
அப்போதுதான்
உன்னுடைய காரியங்கள்
தீய பார்வையிலிருந்து தப்பிக்கும்

6220

Should act
You
Without
Your own sight
Knowing not
Thence
Will escape
Your acts
From
Sights wrathful

https://tt.me/aedahamlibrary

நீங்கள்
அந்த வெளிச்சத்தைக்
கடைசியாக உள்ள
விளக்கிலிருந்து பெற்றிருந்தாலும்
முதல் விளக்கிலிருந்தே பெற்றிருந்தாலும்
எந்த விதமான வித்தியாசமும்
ஏற்படப் போவதில்லை

2265

Difference none
It makes
Should you
Lit that glow last
Or
From
Flame first

https://tt.me/aedahamlibrary

புல்லாங்குழலைக் கவனி
அது என்ன சொல்கிறது
என்பதைக் கேள்
அதன் பிரிவுத் துயரின்
முறையீட்டைச்
சற்றுக் கூர்ந்துகேள்.

0001

Look at
That flute
Listen
What it sayeth
Listen in intent
The symptom
Of
Anguish on
Departing
That flows
From it

https://tt.me/aedahamlibrary

நான் கவிதைக்குப்
பொருத்தமான உருவகத்தைத்
தேடிக் கொண்டிருந்தேன்
ஆனால்
என் மனங்கவர்ந்த அன்பன்
என்னிடம் கூறுகிறான்
என்னுடைய தரிசனத்தைத் தவிர
நீ
வேறெந்த எண்ணத்தையும்
மனதில் கொண்டுவரக் கூடாது

2018

I was searching
Metaphor for
My poem
The pal dear me
Sayeth
You shall not
Discern
Thoughts any
But
The presence
Mine

https://tt.me/aedahamlibrary

அந்தரங்கமான
அந்த இசையை
வெளிப்புறச் செவிகளால்
கேட்கமுடியாது
ஏனெனில்
வெளிப்புறச் செவிகள்
ஒழுங்கீனச் சொற்களால்
அசிங்கப்பட்டுவிட்டன

2229

Shall not listen
In my ears external
That
Music mystic
For
The ears external
Are
Defiled with
Words wicked

https://tt.me/aedahamlibrary

எழுத்து
ஒலி
பேச்சு
இவற்றை நான் அழித்து விடுகிறேன்
அப்போதுதான்
நான் உன்னுடன்
அவை மூன்றும் இல்லாமல்
பேசமுடியும்

2021

Let me
Wipe out
Letters
Sound and
Speech
Only thence
Shall it becomes
Possible for me
Beyond these three
To chat
With thee

https://tt.me/aedahamlibrary

மூலாதாரத்தைத்
தொலைத்துவிட்டு
வெகுதூரம் சென்றுவிட்ட
ஒவ்வொருவனும்
மீண்டும்
காலத்தின் வேர்களுடன்
தன்னை இணைத்த
தொடக்கத்தைத் தேடிக்கொண்டு
வந்தே தீருவான்

0004

Sure will
Return searching
The ones who
Lost that beginning
To the roots of time
Connecting

https://tt.me/aedahamlibrary

உன்னுடைய அறிவானது
உயர்வை நோக்கிப்
பறந்து சென்றபோதிலும்
உன்னைப்
பின்பற்றி வரும் பறவையோ
கீழ்நோக்கியே சென்று
தானியம் தேடுகிறது

7129

Intellect thine
May rise and fly
To heights and peaks
But
The birds that follow
Will sure
Fly down
Always
Searching for their
Grains

https://tt.me/aedahamlibrary

மயானத்திற்குச் சென்று
கொஞ்ச நேரம்
அமைதியாக
அமர்ந்துகொள்
அங்கே
புதையுண்டு கிடப்பவர்களின்
மௌனம் சொல்வதைக்
கவனமாய்க் கேள்

13918

Sit still in peace
Least for a while
At
Grieving graves
Listen to the
Vices of stillness
Of those
There under

https://tt.me/aedahamlibrary

எது
உன்னைவிட்டுச் சென்றுவிட்டதோ
அதைப் பற்றிக்
கவலைப்படாதே
ஏனெனில்
பழைய ஒன்று போய்விட்டால்
புதிய ஒன்று வந்துவிடும்

12315

Anguish not
For
That left thee
For
New ones
Will
Replace in the
Space that
Left by old

https://tt.me/aedahamlibrary

மனமே
சிறிது நேரம்
காலத்தைவிட்டு
வெளியே வந்துவிடு
அப்போதுதான்
சாக்குப்போக்குகளை விட்டு
உன்னால்
வெளியே வரமுடியும்

11002

Exit my mind
For a while
From time
Only thence
Can thee
Eek out from
Pretense many

https://tt.me/aedahamlibrary

நீ ஏற்றுக்கொண்டாலும்
மறுத்தாலும்
இது
எல்லோருக்குமே
தெரிந்த ஒன்றுதான்
நீ
எதை விதைக்கிறாயோ
அதையே நீ நாளை
அறுக்கப்போகிறாய்

13939

All know
That well for sure
Despite you
Affirm or differ
That what
You sow
Shall you the same
harvest tomorrow

https://tt.me/aedahamlibrary

பிரகாசமான கண்ணாடி
தூய்மையாகி
ஒளிர ஆரம்பித்துவிட்ட பின்னர்
மீண்டும் அதை
துடைத்துக்கொண்டே
இருப்பது
முட்டாள் தனமாகும்

10258

Its folly
To
Polish again
Thence
That mirror bright
Clean and glowing

https://tt.me/aedahamlibrary

நம்முடைய முகங்கள்
ஒரே மாதிரியாக இருக்கின்றன
ஆனால்
பல முரண்பட்ட குணங்களால்
சூழப்பட்டுள்ளன
மண்ணும் ஒரே மாதிரியாக இருக்கும்
ஆனால்
அதன் ஆன்மா மாறுபட்டிருக்கும்

13923

Our
Faces are alike
But
Surrounding traits
Different
Terrains too
Similar but
Differ in its
Spirit

https://tt.me/aedahamlibrary

கிளியைப் போல
எப்போதும்
பேசிக்கொண்டே இருக்கும்
பற்றாளர்கள்
அமைதியாய் இருக்கின்றனர்
ஆனால்
மிக இனிமையாய்ப் பேசும்
திறன்கொண்டவர்கள்
வெளிப்பார்வைக்குக்
கடுகடுப்பாய் காட்சிதருகின்றனர்

13917

In
Silence are they
The chattering faithful
Who twaddle
Always
Parrot alike
But
Those who can
Utter sweet
Present
With looks frightful

https://tt.me/aedahamlibrary

இந்த உலகமானது
கதிரொளியாலும்
நிலவொளியாலும் நிரம்பியுள்ளது
ஆனால்
நீயோ
தலையைத் தொங்கப் போட்டவாறு
கிணற்றுக்குள்ளே நுழைகிறாய்

13950

Filled
This earth with
Glow of sun
And
Light of moon
But
Enter you
Bowing head
In submission into
Well deep

https://tt.me/aedahamlibrary

உலகத்தில்
எந்தப் பொருளும்
ஒரே நேரத்தில்
இனிய சர்க்கரையாகவும்
கொடிய நஞ்சாகவும் இருப்பதில்லை
ஒரு காலிலே ஓட்டமும்
ஒரு காலிலே விலங்கும் இருப்பதில்லை
ஏதோ ஒன்றின்
தொடர்பினால்தான்
இது நிகழ்கிறது

14036

Nothing on earth
Is
Toxic and candied
At once
No runs and chains
In legs in sync
It happens
Due to connections
Strange

https://tt.me/aedahamlibrary

ஒழுக்கமற்றவனுக்கு
ஞானத்தையும்
கலைகளையும் புகட்டுவது
ஒரு கள்வனின் கையிலே
வாளைக்
கொடுப்பதைப் போன்றது

15488

To
Feed wisdom and art
To the graceless
Is
Liken to
Hand in
Sword sharp
At the hands of
Bandit

https://tt.me/aedahamlibrary

ஒவ்வொருவருக்கும்
தன் அழகிய தோற்றத்தின் மீதும்
நேர்மையான நடத்தையின் மீதும்
மிகுந்த பெருமை இருக்கும்
மரணம்தான்
அவற்றுக்கு
உரைகல் ஆகுமென்று
உணர வேண்டும்

15744

Proud are
Everyone
On
Their beauty and
Demeanour
But
Should they realize
That
Death is
the touch stone
For that

https://tt.me/aedahamlibrary

நான் மண்ணாக இருந்திருந்தால்
முன்னேற்றமடைந்து
மனிதனாக மாறியிருக்கமாட்டேன்
மண்ணைப் போலவே நானும்
விதைகளை உள்வாங்கிக் கொண்டு
அதற்குப் பதிலாக
மலரும் கனியும் கொடுத்திருப்பேன்

6566

Would not have
Become
Human
Had I been
An earth
Like earth
Would retain
Seeds and
Give back
Flowers and fruits
In return

https://tt.me/aedahamlibrary

நான்
தோட்டக்காரனாக இருக்கிறேன்
ஒவ்வொரு செடியையும்
வளர்த்துவருகிறேன்
உலர்ந்துபோன கிளைகளை
வெட்டி எறிபவனாகவும் இருக்கிறேன்

7507

Gardener
Am I
Mending
Plants each
And same time
Shred and discard
Branches
Dry

https://tt.me/aedahamlibrary

மிகவும் செல்லமாக வளர்ந்த சிலர்
ரோஜாஇதழ் போன்ற கன்னங்களும்
நிலவைப் போன்ற முகமும் கொண்ட
அழகியின் காதலுக்காக
முட்களைப்
பறித்துக்கொண்டு இருக்கிறார்கள்

9314

Those
Brought up with
Fondness plenty
Are plucking thorns
In gardens
To satiate
The yearning
Of their beloved
Of rosy cheeks and
Moonlit face

https://tt.me/aedahamlibrary

உயிரற்ற ஒரு பொருளை
ஒருவன் விரும்புகிறான் என்றால்
அது உயிருள்ள
ஓர் அழகுப்பெட்டகத்தின் மீதுள்ள
காதலினால்தான்

9319

Does he
Loves
That dead one
For
The love
Of that treasure chest
Of living pretty

https://tt.me/aedahamlibrary

இனிமையான
இதழ்களைக் கொண்டவர்களால்
கசப்பானவைகளும்
இனிக்கத் தொடங்கிவிடுகின்றன
பூஞ்சோலையின் காரணத்தினால்
முள்களும்
வசீகரமாகிவிடுகின்றன

9312

Bitterness
Get sweetened
At the lips of
The pretty ones
Thorns
Become adorable
For
They are in
Gardens of
Blooming flowers

https://tt.me/aedahamlibrary

நான் என்னைப் பற்றியே
அறியாமையில் இருக்கிறேன்
என்னுடைய இருப்பின்
ஒரு கடுகளவு அறிகுறியும்
என்னிடம் இல்லாமல் இருக்கிறேன்

9393

Know not I
Not an iota
Of my being
In me
Evidenced

https://tt.me/aedahamlibrary

நீ
உன் குழந்தைகளைக்
கல்விச் சாலைக்குக்
கட்டாயப்படுத்தி
அழைத்துச் செல்கிறாய்
ஏனெனில்
அதன் பயன்பாட்டை
அவர்கள்
அறியாது இருப்பதால்

13723

You
Drive your
Babes to schools
Compelling
For
They know not
Its gains

https://tt.me/aedahamlibrary

முட்டாளின் நட்பு
நிச்சயம்
ஒரு கரடியின் நட்பேயாகும்
அதன் வன்மமே
அதனுடைய அன்பாகும்
அதன் அன்பே
அதனுடைய தீராப் பகையாகும்

6915

Friendship of
Nerds
Akin to that of
A bear
Its vengeance is
Its love
And love its
Enmity endless

https://tt.me/aedahamlibrary

நீ கொடுமையை
விளைவிக்கின்றாய் என்றால்
உனக்காக நீ
புதைகுழியைத் தோண்டுகிறாய்
உனக்காக நீயே
வலையைப் பின்னுகிறாய்

1550

If you
Rise evil
You are
Digging your own
Well
And you
Weave your
Own web net
As wel

https://tt.me/aedahamlibrary

உனது ஆன்மாவை
மனநிறைவைக் கொண்டு
எப்போது
பிரகாசிக்கச் செய்துள்ளாய் நீ
வெறும் மனநிறைவு என்னும்
பெயரைக் கற்றிருக்கிறாய்
அவ்வளவுதான்

2687

You brighten
Your soul
With fulfilment
You learnt
Only
The name
Fulfillment

https://tt.me/aedahamlibrary

கொள்கை
கோட்பாட்டின் அறிவிலே
தேர்ச்சி பெற்ற ஓர் ஆசிரியரிடம்
அவருடைய
செயலாற்றல் பெற்ற
வெற்றிக்குரிய மாணவர்களும்
அதையே தேர்ந்தெடுப்பார்கள்

3260

That successful
Apostle of
A master of pristine principles
Will also
Chose
That visionary
Path

https://tt.me/aedahamlibrary

குழந்தையானது
எதையும் பிடிக்கவோ
நடக்கவோ
கற்றுக்கொள்ளாதவரையில்
அதற்குத்
தந்தையின் தோள்களைத் தவிர
வேறு சவாரி எதுவும் கிடையாது

1100

Until the toddler’s
Grips tolean on
To step forward
Gets firm
Where else but
To ride
On that shoulders dad’s

https://tt.me/aedahamlibrary

நீங்கள்
உங்கள் அறியாமையினால்
நெருப்பின் மீது
எதிர்ப்புக் காட்டும்
விட்டில் பூச்சிகளைப்போல்
மதங்களைக் கொண்டுள்ளீர்கள்

13992

For your ignorance
Like moths
Showing enmity on flames
Rebellion you take
On religion

https://tt.me/aedahamlibrary

ஒரு வழிகாட்டியின்றி
தேடி அலையும் பாதையிலே
நடப்பவனுக்கு
இரண்டுநாள் வழியும்
நூறுநாள் வழியாக ஆகிவிடும்

9367

Wandering listless
Without shepherd
On ways wild
For him
Days two for tracking
Become
Days centennial

https://tt.me/aedahamlibrary

மனிதன்
துன்பமெனும் தீயிலேயே
வெந்துகொண்டிருப்பதால்
வாழ்வெனும் வாகனம் ஓட்டுவதில்
மிகவும் தொல்லையும்
இடையூறுகளும்
விளைந்துகொண்டேயிருக்கும்

2400

The vehicle of life
Moves in greater strain
For
The life of man
Is burnt in the
Fire of misery

https://tt.me/aedahamlibrary

மனிதன் துயரத்திலேயே
ஆழ்ந்திருப்பானேயானால்
அவனுக்கு
உலகமே
பாழடைந்ததாகிவிடும்
அவனது
எல்லையற்ற ஆசைகள்
முடிவற்றதாக்கிவிடும்

2401

The world
Gets deserted
If man drowns
In misery
The efforts become
Endless due to
His ambitions
Limitless

https://tt.me/aedahamlibrary

விழிப்புணர்வு
சூரியனைப் போன்றது
பேராசையோ
பனி போன்றது
விழிப்புணர்வு
தண்ணீரைப் போன்றது
இந்த உலகமோ
அழுக்குப் படிந்தது

2404

Liken sun is
Awareness
Liken mist
Is ambition
Limitless
Liken water
Awareness
Smothered in dirt
Is the world

https://tt.me/aedahamlibrary

நீ ஒரு குருடனாக
இல்லையென்றால்
அந்த இருளை
உனது சொந்த இருளாக நினை
உன்னை நீயே
தீயவன் எனக் கூறு
அடுத்தவர்களைத்
தீயவர்களெனக் கருதாதே

1570

Unless
Blind are you
Consider that
Darikness as
Your own
Spake ye
The wicked
Not say others
Wicked

https://tt.me/aedahamlibrary

அறியாமையில் உழலும்
அறிவீனனுக்கு
அறிவுரை வழங்குவதென்பது
வெடியுப்புப் பூமியிலே
விதைகளை
விதைப்பது போன்றதாகும்

16375

To preach to the dim wit
Liken
Sowing seeds on
Earth parched
And dry